# தேவகிராமம் அளிக்கம்பை மக்களின் வரலாறும் பண்பாடும்

**தனுஜா, க., சாந்தினி,அ.**
வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
tthanuja@gmail.com

*உலகில் நாகரிகத்தின் தொடக்கம் நதிக்கரையோரங்களில் இருந்து உருவாக்கம் பெற்றது. நாகரிக உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ள வளங்கள் குறைவதனாலும் இயற்கையான அனர்த்தம் ஏற்படும் சூழ்நிலையிலும் பல நாகரிகங்களும் அங்குள்ள மக்களும் அழிந்து போனதை வரலாற்றில் காணலாம். அவ்வாறான சூழ்நிலையில் எஞ்சிய மக்கள், குழுவாக வேறு இடங்களுக்கு இடப்பெயர்வது இயல்பான ஒரு விடயமாக காணப்படுகின்றது. இலங்கைக்கு ஆரம்பத்தில் இந்தியாவின் பல திசைகளில் இருந்தும் மக்கள் குடியேறியதை காணக்கூடியதாக உள்ளது. இலங்கை வரலாற்றின் ஆரம்பகால முதல் இன்று வரை இந்தியத் துணை கண்டத்தில் இருந்தோர் வணிகம், நகரமயமாக்கம், (அரசியல்) குடியேற்றங்களை ஏற்படுத்தி எல்லையினை விஸ்தரிப்பு செய்தல், மன்னர்களின் திருமண தொடர்பு போன்ற பல்வேறுபட்ட முறைகளின் ஊடாக மக்களுடன் தொடர்புகளைப் பேணி வந்துள்ளனர். அவ்வகையில் இலங்கையில் தெலுங்கு மொழி பேசுகின்ற மக்கள் இந்தியாவில் இருந்து 15ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் வருகை தந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது. இதனை உறுதி செய்கின்ற வகையில் சான்றுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. அவ்வகையில் இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தின் ஆலையடிவேம்பு பிரதேசப் பிரிவிற்குட்பட்ட தேவக்கிராமம் அளிக்கம்பை எனும் இடத்தில் தெலுங்கு மொழியை தாய் மொழியாகக் கொண்ட சமூகம் வாழ்ந்து வருகின்றது. ஆரம்பக் காலங்களில் நிலையான இடமின்றி வாழ்ந்த இவர்கள் 1950 ஆம் ஆண்டிற்கு பின்னரே ஒரு மதத்தின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்ட சமூகமாக நிலையான இடத்தில் வாழ ஆரம்பித்தனர். இவர்கள் இலங்கைத் தமிழர் என்று இலங்கை அரசால் பதிவு செய்யப்பட்டவராகக் காணப்பட்டாலும், தங்களுக்குள் சுதேச மொழியைப் பேசாமை யினால் மற்றவர்களின் பார்வையில் வேற்று இனமாகவே காணப்பட்டனர். இம்மக்கள் பற்றிய எழுத்து மூலச் சான்றுகள் மிகக் குறைவாகும். இக்கிராம மக்களின் வரலாறு, அவர்களின் பண்பாட்டு என்பவற்றை வெளிக்கொணர்வதாக இவ்வாய்வு அமைகின்றது.*

**திறவுச்சொற்கள்:** இடப்பெயர்வு, தெலுங்கு, இலங்கைத் தமிழர், வனக்குறவர், மொழி